1970 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) ஆம்.

(இ) இந்து சமயநிலை நிதியிலிருந்து ஐந்து கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன.

திரு. ஆலடி அருணா: இந்த கோயில்களில் எல்லாம் குறிப்பிட்ட வருமானத்திற்கு மேல் இவ்வளவு சதவிகிதம் பொதுப் பணிக்காகச் செலவு செய்ய வேண்டுமென்று உத்தரவிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.வி. சுப்பையா: இத்தனை பர்சன்ட் அப்படிச் செலவிட வேண்டுமென்று சொல்லுவதற்குச் சட்டத்தில் இடம் கிடையாது. பொதுப்பணிக்கும் செய்யலாம் என்று சட்டத்தில் இடம் இருக்கிறது. பொதுப்பணிகளுடைய தன்மையைக் கருதியும் அத்தியாவசியத்தைக் கருதியும் இந்தப் பணிகள் நடந்து வருகின்றன.

திரு. ஈ. எம். நடராசன் : கோவை மாவட்டம் பன்னாரி மாரி அம்மன் கோயில் வருமானத்தில் இருந்து கல்லூரி அமைத்துக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை அரசாங்கத்திற்கு வந்ததா ? அங்கு கல்லூரி விரைவில் ஏற்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : பன்னாரி அம்மன் கோயில் நிதியிலிருந்து கல்லூரி கட்டப் பணம் கொடுக்க வேண்டுமென்று நான் கோவை சென்றிருந்தபோது கேட்டுக் கொண்டார்கள். அந்த கோரிக்கை இன்னும் அரசாங்கத்திற்கு வரவில்லை. எங்களைப் பொறுத்தவரை கோயில் நிதியிலிருந்து பணத்தைக் கொடுப்பதற்குத்தான் அதிகாரம் இருக்கிறதே தவிர கல்லூரியை ஆரம்பிக்க வேண்டுமென்றால் கல்வியமைச்சருக்குக் கோரிக்கை கொடுக்க வேண்டும். அதை பன்னாரி அம்மன் கோயில் இருக்கும் பகுதியிலேயே ஏற்படுத்துவதா அல்லது பவானியில் அதிக நிலங்கள் இருப்பதால், கட்டடங்கள் இருப்பதால் அங்கு ஏற்படுத்துவதா என்பதும் பரிசீலனையில் இருக்கிறது. கல்வியமைச்சரை முதலில் அணுகிய பிறகு இந்தக் கோயிலுக்கு வந்தால் நல்லது.

சமயநல்லூர் அனல் மின் நிலையம்.

* **வினா 653 திரு. கே. போஜன்:** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சமயநல்லூரிலுள்ள அனல் மின்சார நிலையம் கடந்த ஓராண்டு காலமாக செயல்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) & (இ) 15—7—1968-லிருந்து சமயநல்லூர் அனல் மின்சார நிலையம் இடைவெளிவிட்டுச்

சில நாட்களே இயங்கியது. கீழ்க்கண்ட காரணங்களுக்காகச் சமயநல்லூரிலுள்ள அதன் சாதனங்களை விற்றுவிடுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

(1) சமயநல்லூரில் வழங்கப்படும் நிலக்கரியின் விலை அதிகமாயுள்ளதாலும், அங்குள்ள 'டர்போ ஆல்டர்னேட்டர்' (turbo alternator) குறைந்த செயல் திறனையே பெற்றுள்ளதாலும் சமயநல்லூர் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து அனுப்பப்படுகிற ஒவ்வொரு யூனிட் மின்சக்திக்கும் உரிய செலவு 12 காசிற்கு மேல் ஆகின்றது. மின்சக்தி அதனைவிட மிகக் குறைந்த செலவில் கேரளத்தினின்றும் நெய்வேலியினின்றும் கிடைக்கிறது.

(2) சமயநல்லூரிலுள்ள மின்சக்தி நிலையத்தின் நிறுவப்பட்ட உற்பத்தித் திறனளவாகிய 14 மெகாவாட் மின் இணைப்பில் நிறுவப்பட்ட மொத்தத் திறனளவில் 1 சதவிகிதமே ஆகின்றது. எனவே, இந்த மின்நிலையச் சாதனங்களை விற்றுவிடுவதால் மின் இணைப்பின் திறனளவு மிகச் சொற்ப அளவே பாதிக்கப்படும்.

(3) நெய்வேலியிலுள்ள அனல் மின்சார நிலையத்துடனும் கேரள மின் இணைப்புடனும் மதுரை இணைக்கப்பட்டுள்ளதால், சமயநல்லூர் மின் உற்பத்திச் சாதனங்களைக் கொண்டு பாபநாசம், பெரியாறு மின் உற்பத்தியை உறுதிப்படுத்த வேண்டிய அவசியம் இனிமேல் இல்லை.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, சமயநல்லூரில் இருக்கும் அனல் மின் நிலையத்தை மூடிவிடுவதற்கான காரணங்களைச் சொன்னார்கள். அங்கே விலை மதிக்கக்கூடிய இயந்திரங்கள் இருக்கின்றன. அவற்றை பேசின் பிரிட்ஜ் பவர் ஹவுசுக்குக் கொண்டு வந்து பயன்படுத்தும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : சமயநல்லூர் மின் உற்பத்தி நிலையம் 14 மெகா வாட் உற்பத்தி செய்யக்கூடியது. இப்போது நிலக்கரி விலை அதிகமாக இருப்பதால் நாம் உற்பத்திக்காகச் செய்யக்கூடிய செலவை விட குறைந்த செலவில் கேரளத்திலிருந்தும், நெய்வேலியிலிருந்தும் கிடைப்பதால் இதை மூடிவிடுவது என்று முடிவு செய்யப்பட்டது.

10.00. **திரு. எஸ். இராமச்சந்திரன் :** இந்த சமயநல்லூர் அனல் மின் நிலையம் மூடப்படுவதால் அங்குள்ள தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு தருகிற வகையில் விநியோகப்பகுதிகளுக்கு அவர்களை மாற்றிப் போடுவதற்கு மதுரை திட்டம் போன்றவற்றிற்கு மாற்றிப் போடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பின்னால் அங்கு ஒரு பெரிய வொர்க்ஷாப் ஆரம்பிக்க செயற்குறிப்பு இருக்கிறது. அதில் வேலை பார்க்கிறவர்களுக்கு, நெடுநாள் வேலை பார்க்கிறவர்களுக்கு வேலை உறுதி அளிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.